28 பிப்ரவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலம் 1ம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:
வேற்றுமையில் ஒற்றுமை



# உமது பலி எது?

இயேசுவின் உருமாற்றம், இறைமகனின் அதிகாரத்தையும் அரசுரிமையையும் அங்கீகரிக்கும் இறைத் திட்டத்தை அனைவருக்கும் வெளிப்படுத்துகிறது. இந்த நிகழ்வில், இறைவாக்கினர்கள் மோசேயும் எலியாவும் தோன்றி, இயேசுவை ஆமோதிக்கின்றனர். தம் ஒரே மகனை பலியிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட ஆபிரகாமின் பலிக்கு எதிர்மாறாக இது இருக்கிறது. பலியிட கல்லான இதயத்தோடு ஏறிய மலையை தனியாக இறங்க வேண்டி வரும் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தார். அவரது இதயம் சுக்கு நூறாக உடைந்தது. அடுத்து என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியும். ஆபிரகாமின் நம்பிக்கையை சோதித்து-அறிந்து கொண்ட கடவுள், மகனை வெட்ட ஓங்கிய கையை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கிறார். ஆயினும், தம் ஒரே மகனுக்கு இதே மாதிரியாக தந்தையாகிய கடவுள் செய்யவில்லை.

தமது மகன் கைவிடப்பட, தீர்ப்பிடப்பட, சித்ரவதை செய்யப்பட்டு துன்பப்பட கடவுள் அனுமதித்தார். இயேசுவின் உருமாற்றம் இதில் சிறப்படைகிறது. தந்தையாகிய கடவுள் தம் ஒரே மகனை மகிமைப்படுத்தினார். அந்த மகிமைக்குரிய மகன் சிலுவையில் அறையப்பட்டார். இறைவாக்கினர்கள் மோசேக்கும் எலியாவுக்கும் இடையில் நிற்கும் இயேசு ஆராதனைக்கும் புகழ்ச்சிக்கும் உரியவர். புகழப்பட்ட இந்த மகனைதான், மனுக்குலத்தின் மீட்புக்காக பலியிட கடவுள் அனுமதித்தார். பலியிடப்பட்ட செம்மறி ஆடு, வாழ்வின் ஆதாரமானது.

“தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்தார் கடவுள்” (உரோ.8:32) என புனித பவுல் கூறுகிறார். உனக்காகவும் எனக்காகவும் கடவுள் இதனைச் செய்தார். ஆண்டவரும் தலைவருமான நமதாண்டவருக்கு நம்மையே வழங்க அழைக்கப்படுகிறோம். அவருக்காக எப்போது எதை தியாகம் செய்யப் போகிறோம்? ஏழையின் முகத்தில் அவரைப் பார்க்கும் போது இதனை நாம் செய்கிறோம். அவர்களது குரலுக்குச் செவிசாய்க்கும் போது அல்லது நமது அன்றாட வாழ்க்கை போராட்டங்கள் மத்தியில் பிறர்மீது அவர் காட்டிய அன்பை நாம் செயல்படுத்துகிறோம். விரக்தியும் வேதனையும் கொள்ளும் நாள்களிலும் நாம் நம்பிக்கையில் உறுதியாக இருந்து இதனைச் செய்கிறோம். நமக்காக உயிர்த் தியாகம் செய்த இயேசுவுக்கு நாம் செய்யும் சின்னஞ்சிறிய தியாகச் செயல்கள் பரிசாக அமையும். “ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்” (யோவான்10:10)

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“கடவுள் நம் சார்பில் இருக்கும் போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?”
(உரோ. 8, 31)

**இன்றைய வாசகங்கள்:**

தொநூ. 22, 1-2. 9. 10-13. 15-18.
திபா. 115, 10. 15-19.
உரோ. 8, 31-34.
மாற்கு 9, 2-10.

INTERNAL CIRCULATION ONLY
BUL 09/2021
Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org